Literacy for a Billion

Movie: Kondaan Koduththaan
Year: 2012

Song: Paavadai Pataam Poochi
Lyricist: N A Muthukumar

தஞ்சாவூரு கோபுரம் அழகு
திருச்செந்தூர் முருகன் அழகு
தஞ்சாவூரு கோபுரம் அழகு
திருச்செந்தூர் முருகன் அழகு
திருவாரூர் தேரும் அழகு
திருச்சி மலைக்கோட்டை அழகு
ஒன்று சேர்ந்து வாழ்வதுதானே
எந்நாளும் எங்களின் அழகு
தஞ்சாவூரு கோபுரம் அழகு
ஆ...

அன்பு எனும் விதை
இங்கு மரமாகும்
புன்னகையே எங்களுக்கு
உரமாகும்
இங்கு வந்து வாழ்வதே
வரமாகும்
வரமாகும்
சின்னச்சின்ன குறும்புகள்
அரங்கேறும்
செல்லமான சண்டை தினம்
வரும் போகும்
நூறு வண்ண வானவில்லை
தரும் வானம்
உறவாகும்
உறவாகும்
பலபூக்கள் சேரும் மாலை
ஆ...
பலபூக்கள் சேரும் மாலை
வாடாத பாசச் சோலை
கண்கள் கொஞ்சம்
கலங்கும் வேளை
தூணாக தாங்கும் தோளை
வாசல் கதவென்றும்
திறந்தே இருக்கும் மூடாது

மாதம் முப்பது நாள்
விருந்துகள் நடக்கும்
தவறாது
இதிகாசம் பாடாத
புது காவியம்
இது யாரும் தீட்டாத
உயிரோவியம்
தஞ்சாவூரு கோபுரம் அழகு
ஆ...

ஈரமுள்ள நெஞ்சு
எங்கள் பலமாகும்
மானம்தானே எங்களுக்கு
பெரிதாகும்
வீரத்தோடு வாழ்ந்து வந்த
இனம் எங்கள் இனமாகும்
திண்ணை எல்லாம்
அன்னைமடி கதை பேசும்
தென்றல் வந்து
தினம் இங்கு
இசை பாடும்
துள்ளி துள்ளி
இன்பம் வந்து அலைமோதி
விளையாடும்
தங்கை கண்ட
கனவை கண்டால்
ஆ...
தங்கை கண்ட
கனவை கண்டால்
அண்ணன் நெஞ்சம்
அதனை சொல்லும்
தங்கக்கட்டில்
வாங்கித் தந்தே
தாலாட்டி தூங்க செய்யும்
யாரும் காணாத

பாசம் எங்கள் பாசம்தான்
தூரம் போனாலும்
குறையாது எங்கள் நேசம்தான்
இதிகாசம் பாடாத
புது காவியம்
இது யாரும் தீட்டாத
உயிரோவியம்

தஞ்சாவூரு கோபுரம் அழகு
திருச்செந்தூர் முருகன் அழகு
திருவாரூர் தேரும் அழகு
திருச்சி மலைக்கோட்டை அழகு
ஒன்று சேர்ந்து வாழ்வதுதானே
எந்நாளும் எங்களின் அழகு
தஞ்சாவூரு கோபுரம் அழகு

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.